

கலைஞர் 100
1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 299 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – வைகாசி 26 – திங்கள்கிழமை 09 ஜூன் 2025 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 299 : Thiruvalluvar Year - 2056 - Vaikasi 26 - Monday 09 June 2025 - Chennai 16 Pages ₹ 5.00


## தொடர்ந்து நீர்வரத்து அதிகரிப்பு: டெல்டா மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி!

# மேட்டூர் அணை ஜூன் 12-ல் திறப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

**சேலம், ஜூன் 9-**

**காவிரி டெல்டா பாசனத்திற்காக வரும் 12ம் தேதி அன்று மேட்டூர் அணையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்கிறார். அணையின் நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது. மேட்டூர் அணையை நம்பியுள்ள விவசாயிகள் இதனால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.**

மேட்டூர் அணை நீரைக்கொண்டு தமிழ்நாட்டின் 12 மாவட்டங்களும், காரைக்கால் பகுதியும் பயனடைகின்றன. இந்நீரை நம்பி இம்மாவட்டங்களில் சுமார் 20 லட்சம் ஏக்கரில் பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. 12 மாவட்டங்களிலும் சாகுபடி நிலங்கள் சமவெளி பரப்பு என்பதால் வேறு அணைக்கட்டுகள் எதுவும் இன்றி மேட்டூர் அணை நீரை நம்பியே உள்ளது.

காவிரி டெல்டா பாசனத்திற்காக வரும் 12ம் தேதி மேட்டூர் அணையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்க உள்ளார்.

இந்நிலையில், காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கன மழையால் மேட்டூர் அணைக்கான நீர்வரத்து மீண்டும் அதிகரித்துள்ளது. அணைக்கான நீர்வரத்து நேற்று முன்தினம் காலை வினாடிக்கு 4 ஆயிரத்து 753 கன அடியாக இருந்தது. நேற்று காலை அணையின் நீர்வரத்து வினாடிக்கு 6 ஆயிரத்து 119 கன அடியாக அதிகரித்துள்ளது. அணையின் நீர்மட்டம் தற்போது 113.89 அடியாக உள்ளது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 1,000 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.



இம்மாவட்டங்களில் பயிர் சாகுபடிக்காக ஒவ்வொரு ஆண்டும் மேட்டூர் அணை ஜூன் 12ம் தேதி திறக்கப்படுவது வழக்கம். தற்போது அணையில் நூறு அடிக்கும் மேல் நீர்மட்டம் உள்ளதால் மேட்டூர் அணையில் இருந்து வழக்கமான நாளில் அதாவது வரும் 12ம் தேதி டெல்டா மாவட்டங்களின் நெல் சாகுபடிக்காக நீர் திறக்கப்பட உள்ளது. தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வரும் 12ம் தேதி மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விட உள்ளார்.

இதையடுத்து விவசாயிகள் சாகுபடி முன்னேற்பாடு பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். விதைப்புக்கு நாற்றங்கால் தயார் செய்யும் பணி, இயற்கை எரு உரம் இடும்பணி, உழவு பணி ஆகியவைகளை விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் பம்புசெட் வசதியுள்ள விவசாயிகள் முன்பட்ட குறுவை சாகுபடி பணியை தொடங்கி உள்ளனர். தஞ்சாவூர் மாவட்டத்தில் 2025-26ம் ஆண்டில் சுமார் மூன்று லட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட உள்ளது. இதில் தற்போது முன்பட்ட குறுவை பருவத்தில் இதுவரை சுமார் 85000 ஏக்கர் பரப்பில் நெல் நடவு பணி முடிவடைந்துள்ளது.

அதில் 20000 ஏக்கரில் இயந்திர நடவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுமார் 10,000 ஏக்கரில் நாற்று விடப்பட்டுள்ளது. நடப்பு குறுவை பருவத்திற்கு தேவையான விதை நெல் ரகங்கள் 211 மெட்ரிக் டன் வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.



தஞ்சாவூர் மாவட்டத்தில் நடப்பு 2025-26ம் ஆண்டில் “குறுவை சிறப்பு தொகுப்பு திட்டம்” செயல்படுத்தப்படவுள்ளது. இயந்திர நடவு பணி மேற்கொள்ளும் ஒவ்வொரு விவசாயிகளுக்கும் ஏக்கருக்கு ரூ. 4000 வீதம் வழங்கப்பட உள்ளது. இயந்திர நடவு செய்யவுள்ள விவசாயிகள் உழவன் செயலியில் முன்பதிவு செய்திட கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் உயிரி உரம், நுண்நூட்ட சத்துக்கள் மற்றும் விதைகள் 50% மானியத்தில் வழங்கப்பட உள்ளது. இதற்கான அறிவிப்பு தமிழக முதல்வர் வரும் 15ம் தேதி தஞ்சை வருகையின் போது வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

### கல்லணை திறப்பு!

இதேபோல் மேட்டூரில் திறக்கப்படும் தண்ணீர் வரும் 15ம் தேதி இரவு கல்லணை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதைத்தொடர்ந்து 16ம் தேதி காலை கல்லணையில் இருந்து டெல்டா மாவட்டங்களின் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்பட உள்ளது.

இது குறித்து இன்று (9.6.2025) அமைச்சர்கள் அதிகாரிகளும் ஆலோசனை மேற்கொண்டு முடிவெடுக்கின்றனர்.

இந்நிலையில், அன்றைய தினம் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தஞ்சை மாவட்டத்தில் அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தரும் நிலையில் கல்லணையிலிருந்து தண்ணீர் திறந்து விட வேண்டும் என விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதுதொடர்பாக அரசு அதிகாரிகள் தரப்பில் கேட்டபோது, கல்லணையில் இருந்து தமிழக முதல்வர் தண்ணீர் திறந்து விடுவதற்கான நிகழ்ச்சி ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளனர்.



**மேட்டூரில் திறக்கப்படும் தண்ணீர் வரும் 15ம் தேதி இரவு கல்லணை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதைத்தொடர்ந்து 16ம் தேதி காலை கல்லணையில் இருந்து டெல்டா மாவட்டங்களின் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்பட உள்ளது. இதுகுறித்த ஆலோசனைக் கூட்டம் அமைச்சர்கள் முன்னிலையில் இன்று நடைபெறுகிறது.**

---

## சென்னை கிளாம்பாக்கத்தில் இருந்து 4 நாட்களில்

# 11 ஆயிரத்து 26 அரசு பேருந்துகள் மூலம் 6 லட்சம் பேர் பயணம்!

## அரசு போக்குவரத்துக் கழகம் அறிவிப்பு!

**சென்னை, ஜூன் 9 -**

**அரசு விரைவு போக்குவரத்து கழக மேலாண் இயக்குனர் கூறுகையில், முகூர்த்தம், பக்ரீத் பண்டிகை மற்றும் வார விடுமுறையை யொட்டி, 7ம் தேதி முதல் 8ம் தேதி அதிகாலை 2 மணி வரை, சென்னையில் இருந்து வழக்கமாக இயக்கப்படும் 2 ஆயிரத்து 92 பேருந்துகள் மற்றும் 936 சிறப்புப் பேருந்துகள் என 3 ஆயிரத்து 28 பேருந்துகளில், ஒரு லட்சத்து 66 ஆயிரத்து 540 பயணிகள் பயணம் செய்துள்ளனர். மேலும், கடந்த 4ம் தேதி முதல் 8ம் தேதி அதிகாலை 2 மணி வரை 11 ஆயிரத்து 26 பேருந்துகளில், 6 லட்சத்து 6 ஆயிரத்து 430 பயணிகள் பயணம் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதுதொடர்பாக அரசு விரைவு போக்குவரத்துக்கழக மேலாண்மை இயக்குனர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னை கிளாம்பாக்கத்தில் இருந்து திருவண்ணாமலை, திருச்சி, மதுரை, நெல்லை, நாகர்கோவில், கன்னியாகுமரி, கும்பகோணம், தூத்துக்குடி, கோவை, சேலம் ஈரோடு திருப்பூர் ஆகிய இடங்களுக்கு முன்பதிவு அடிப்படையில் சிறப்பு பேருந்து ஏற்பாடு செய்யப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது. கடந்த 4ந் தேதி (புதன்கிழமை) தினசரி இயக்கக்கூடிய 1,136 பஸ்களுடன் கூடுதலாக 200 பஸ்கள் இயக்கப்பட்டு 73 ஆயிரத்து 480 பயணிகளும், 5ந் தேதி (வியாழக்கிழமை) கூடுதலாக 622 பஸ்கள் இயக்கப்பட்டு 96 ஆயிரத்து 690 பயணிகளும் மற்றும் 6ந் தேதி (வெள்ளிக்கிழமை) கூடுதலாக 798 பஸ்கள் இயக்கப்பட்டு 1 லட்சத்து 6 ஆயிரத்து 205 பயணிகளும் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

கடந்த 3 நாட்களில் பயணிகளின் தேவைக்கேற்பவும், முன்பதிவு அடிப்படையிலும் போதுமான பஸ்கள் இயக்கப்பட்டுள்ளது. 4ந் தேதி 7 ஆயிரத்து 31 பயணிகளும், 5ந் தேதி 8 ஆயிரத்து 496 பயணிகளும், 6ந் தேதி 9 ஆயிரத்து 364 பயணிகளும் முன்பதிவு செய்து பயணம் மேற்கொண்டுள்ளனர். இந்த 3 நாட்களில் மொத்தம் 24 ஆயிரத்து 831 முன்பதிவு செய்த பயணிகள் உள்பட 2 லட்சத்து 76 ஆயிரத்து 735 பயணிகள் பயணம் செய்துள்ளனர்.

சென்னையில் இருந்து வெளியூர் செல்வதற்கு 94 ஆயிரத்து 926 முன்பதிவு இருக்கைகள் உள்ள நிலையில் 26 சதவீத இருக்கைகள் மட்டுமே கடந்த 3 நாட்களில் முன்பதிவு செய்து பயணிகள் பயணம் மேற்கொண்டுள்ளனர். முன்பதிவு வசதி உள்ள அரசு பஸ்களில் அதிகபட்சமாக 9 சதவீதம் மட்டுமே முன்பதிவு செய்யப்படுகிறது. பயணிகள் முன்பதிவு செய்து பயணம் செய்தால், பஸ் நிலையங்களில் தேவையற்ற விவாதங்கள், முண்டியடித்து ஏறுதல் மற்றும் தேவையற்ற சர்ச்சைகள் ஏற்படுவதை அறவே தவிர்க்கப்படும். மேலும் நள்ளிரவு நேரங்களில் ஒரே நேரத்தில் மிக அதிகளவில் பயணிகள் பஸ் நிலையத்திற்கு பயணம் மேற்கொள்ள வருகை புரிவதால் பயணிகளுக்கு தவிர்க்க முடியாத சிரமம் ஏற்படுகிறது. எனவே, தொலைதூர பயணம் மேற்கொள்ளும் பயணிகள் கடைசிநேர கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு www/tnstc.in என்ற இணையதளம் மற்றும் செயலி மூலம் முன்பதிவு செய்து பயணிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பயணிகள் முன்பதிவு செய்யும் பட்சத்தில் தேவைக்கேற்ப கூடுதலாக பஸ்களை இயக்கிட வழிவகை செய்யப்படும். எனவே, பயணிகள் தங்களது பயணத்தை முன்கூட்டியே திட்டமிட்டு முன்பதிவு செய்து எந்தவித சிரமமும் இன்றி பயணம் செய்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த 4ம் தேி முதல் 8ம் தேதி அதிகாலை 2 மணி வரை 11 ஆயிரத்து 26 பேருந்துகளில், 6 லட்சத்து 6 ஆயிரத்து 430 பயணிகள் பயணம் செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## பொதுமக்கள் வெளியே வர தடை!

# மணிப்பூரில் மீண்டும் வன்முறை வெடித்தது!

### 144 தடை உத்தரவு அமல்!

*இம்பால், ஜூன் 9 -*

*மணிப்பூர் மாநிலத்தில் கடந்த 2023ஆம் ஆண்டு மே மாதம் குக்கி மற்றும் மெய்தி இன மக்களிடையே ஏற்பட்ட மோதல் மிகப்பெரிய வன்முறையாக மாறியது. அதைத் தொடர்ந்து நிகழ்ந்த வன்முறை சம்பவங்களில் 260க்கும் மேற்பட்டோர் உயிரிழந்த நிலையில், கடந்த பிப்ரவரி மாதம் பாஜக அரசு கலைக்கப்பட்டு குடியரசுத்தலைவர் ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டது.*

*மணிப்பூரின் பல்வேறு மாவட்டங்களில் பதற்றம் தணியாத நிலையில், மெய்தி குழுவைச் சேர்ந்த அரம்பை தெங்கோல் பிரிவுத் தலைவர் தேசிய புலனாய்வு முகமையால் கைது செய்யப்பட்டார். இதையடுத்து, நேற்று முன்தினம் இம்பால் கிழக்கு, இம்பால் மேற்கு உள்ளிட்ட 5 மாவட்டங்களில் போராட்டம் வெடித்தது. மேலும், பொதுச்சொத்துகளை சேதப்படுத்தி போராட்டக்காரர்கள் வன்முறையில் ஈடுபட்டனர்.*

*இந்நிலையில், வன்முறை பரவுவதை தடுக்கும் வகையில், இம்பால் மேற்கு, இம்பால் கிழக்கு, தவுபால், காக்சிங், பிஷ்ணுபூர் ஆகிய 5 மாவட்டங்களில் வரும் 11 ஆம் தேதி வரை 5 நாட்களுக்கு இணைய சேவை ரத்து செய்யப்பட்டுள்ளது. மேலும், பிஷ்ணுபூர் மாவட்டத்தில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, மற்ற 4 மாவட்டங்களில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசியத் தேவைகளுக்கு மட்டுமே குடியிருப்புகளை விட்டு வெளியே வர வேண்டும் என பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.*